பெரியாரின் அறிவுலகம்தான் இன்றும் என்றும் தேவை

தமிழா அறிவு கொள்! பகுத்தறிவைப் பயன்படுத்து!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளத்தில் பதிவு!

சென்னை, நவ.5-

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் தமிழா அறிவு கொள்! பகுத்தறிவைப் பயன்படுத்து என்று குறிப்பிட்டுள்ளார்.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:-

"தமிழா அறிவு கொள்!

பகுத்தறிவைப் பயன்படுத்து!

அறிவுதான் இறுதியில் வெல்லும்; உறுதியாய் வெல்லும்!" என்று சொன்ன பெரியாரின் அறிவுலகம்–தான் இன்றும் என்றும் தேவை.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.



மாவட்டப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் - முன்னணியினர் பங்கேற்பு!

குன்னம் சி.இராஜேந்திரன் படத்திறப்பு நிகழ்ச்சி!

முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு – ஆ. இராசா. எம். பி. புகழுரை!

பெரம்பலூர், நவ. 5

பெரம்பலூர் மாவட்ட தி.மு.க.சார்பில் தி மு.க.முன்னாள் மாவட்ட கழகச்செயலாளர் குன்னம் சி. இராஜேந்திரனின் திரு உருவ படத் திறப்பு விழா நிகழ்ச்சி முத்துகிருஷ்ணா திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

முன்னாள் அமைச்சர் கே.என். நேரு ,முன்னாள் மத்திய அமைச்சர் ஆ. இராசா.எம்.பி., உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பெரம்பலூர் முன்னாள் மாவட்ட கழகச்செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன் கடந்த மாதம் 7ஆம் தேதி உடல் நலக்குறைவால் காலமானார்.

அவரது திரு உருவப்பட திறப்பு விழா நிகழ்ச்சி முத்துகிருஷ்ணா தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் கழக முதன்மைச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான கே.என்.நேரு, கழக துணைப் பொதுச்செயலாளரும், மேனாள் ஒன்றிய அமைச்சருமான ஆ.இராசா. எம்.பி.,ஆகியோர் கலந்து கொண்டு, மறைந்த குன்னம் சி.இராஜேந்திரன் உருவம் படத்தை திறந்து வைத்து, அவர் தி.மு.க. விற்காக செய்த அர்ப்பணிப்பு மற்றும் களப்பணிகள் குறித்தும், அவர் பொறுப்பில் இருந்த காலத்தில் தி.மு.க. சார்பில் நடத்தப்பட்ட பல்வேறு கட்ட போராட்டங்கள், கட்சியின் வளர்ச்சி குறித்தும் பேசினார்கள்.

விழாவில் முன்னாள் அமைச்சர் அமைச்சர் கே.என். நேரு பேசுகையில்,

தி.மு.க.வை காங்கிரஸ் எதிர்த்தது, பின்னர் காமராஜரர் தி.மு.க.வை எதிர்த்தார், அதற்குப் பிறகு எம்.ஜி.ஆர், ஜெயலலிதா, எடப்பாடி பழனிச்சாமி இப்படி பலரும் எதிர்த்தார்கள், எதிர்த்தவர்கள் தான் மாறிக்கொண்டே உள்ளனர், ஆனால்தி.மு.க.என்றும் நிரந்தரமாக உள்ளது என பேசினார். இதில் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் மு.அட்சயகோபால், வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் கி.முகுந்தன், ந.ஜெகதீஷ்வரன், செ.அண்ணாதுரை, பட்டுச்செல்வி ராஜேந்திரன், டி. கே. ராமச்சந்திரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், நூருல்ஹிதா இஸ்மாயில், சன்.சம்பத், மாவட்ட பொருளாளர் செ.ரவிச்சந்திரன், ஒன்றிய கழக செயலாளர்கள் என். கிருஷ்ணமூர்த்தி, எம்.ராஜ்குமார், செ.நல்லதம்பி, தி. மதியழகன்,சி.ராஜேந்திரன், ஒன்றிய பொறுப்பாளர்கள் டாக்டர் செ.வல்லபன், அழகு. நீலமேகம், மாவட்ட அரசு குற்றவியல் வழக்கறிஞர் ப.செந்தில்நாதன், தொ.மு.ச.மு.ராஜகாந்தம், வேப்பந்தட்டை ஒன்றிய முன்னாள் பெருந்தலைவர் க.ராமலிங்கம், முன்னாள் துணை பெருந்தலைவர் எம்.ரெங்கராஜ், அரும்பாவூர் பேரூர் கழக செயலாளர் ஆர்.ரவிச்சந்திரன், பூலாம்பாடி பேரூர் கழக செயலாளர் செல்வலட்சுமி சேகர்,லெப்பைக்குடிக்காடு பேரூர் கழகச் செயலாளர் ஜாகிர் உசேன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஆதவன்(எ)ஹரிபாஸ்கர், துணை அமைப்பாளர்கள் டி.ஆர்.சிவசங்கர், அ. அப்துல்கரீம், வ. சுப்ரமணியன், ஆர்.அருண், மா.பிரபாகரன், தொ.மு.ச. மாவட்ட கவுண்சில் பேரவை தலைவர் கே.கே. எம்.குமார், தொ.மு.ச. கவுண்சில் பேரவை மாவட்ட செயலாளர் ஆர். ரெங்கசாமி, மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் கவிஞர் முத்தரசன், மாவட்ட சிறுபான்மை அணி அமைப்பாளர் பாரி(எ) அப்துல்பாரூக், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தங்க. கமல், தலைமை கழக பேச்சாளர்கள் எசனை ஆறுமுகம், மு. விஜயரத்தினம், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் தி. இராசா, மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் எம். மணிவாசகம், வழக்கறிஞர் கண்ணன் மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஆர். வேணுகோபால், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் சு.தங்கராசு, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால், தொழிலாளர் அணி அமைப்பாளர் ஆர். முருகேசன், மாவட்ட மகளிர் அணி விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் வெ. கார்மேகம், மற்றும் குன்னம் சி. இராஜேந்திரன் குடும்பத்தினர்களான மனைவி ரா. ராமதிலகம், மகன்கள், மருமகள்கள் ரா. செந்தில்நாதன், அமுதா, ரா. வெற்றிவேல் விஜயபிரியா, ரமேஷ் ராஜேந்திரன்சந்திரலேகா உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

அந்துமணி சிந்துமணி



அந்துமணி : ஏண்டி சிந்து, குறைந்த விலையிலே தரணும்னு, 450 டன் வெங்காயத்தை மகாராஷ்டிராவில் நம்ம அதிகாரிகள் போய் வாங்கி, ரயில் மூலம் தமிழ்நாட்டுக்கு அனுப்பியதா சொன்னாங்க. வந்தது எல்லாமே அழுகி இருந்ததால், திருப்பி அனுப்பிட்டதா அதே நம்ம அதிகாரிங்க சொல்றாங்க. ஆனால் ரயில் அதிகாரிங்களோ அப்படி எதுவும் திருப்பி அனுப்பச் சொல்லி எங்க கிட்ட வரலைங்கறாங்க. அப்ப எங்க தான் அந்த 450 டன் வெங்காயம் போயிருக்கும்?

சிந்துமணி : ஆமாண்டி அந்து; எம்மாம் பெரிய ஃப்ராடுத்தனம். ஒரு சமயம் தன் துறைகளை ஒழுங்கா கவனிக்காமல் மற்றத் துறைகளில் மூக்கை நுழைக்கிற 'கலெக்சன்' குமாரைக் கேட்டால் தெரியுமோ என்னவோ! 450 டன் மெகா சுருட்டலை நினைச்சா இப்பவே கண்ணு எரியுது! தண்ணி வருது.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

கோவை மு. சுலைமான்

நவம்பர் 5 (1983)



தனது இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

கோவை மாவட்டக் கழக பிரதிநிதியாக பொறுப்பு வகித்தவர்.

நெருக்கடி காலத்தில் மிசா சட்டம் அமல்படுத்தப்பட்ட போதும், தைரியமாக முரசொலி முகவராக பணியாற்றியவர்.

கோவை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி இயக்குனராக பதவி வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

யானைகள் இடமாற்றம்: பா.ஜ.க. அடிமையான த.வெ.க. அரசை

சந்தர்ப்பவாத கூட்டணிக் கட்சிகள் கேள்வி கேட்காததேன்?

தி.மு. கழக ஐ.டி. பிரிவு வினா!

சென்னை, நவ.5-

பா.ஜ.க.,வின் அடிமையான தவெகவை கேள்வி கேட்காமல் சந்தர்ப்பவாதக் கூட்டணிக் கட்சிகள் வேடிக்கை பார்த்து கொண்டிருப்பதாக திமுக ஐ.டி., விங் விமர்சித்துள்ளது.

தி.மு.க. ஐ.டி., விங் வெளியிட்டுள்ள சமூகவலைத்தளப் பதிவில், அசாமில் இருந்து யானைகளை எடுத்து வரும் விவகாரத்தில், த.வெ.க. அரசு பா.ஜ.க.வின் கைப்பாவையாகச் செயல்பட்டது வெட்ட வெளிச்சமாகியுள்ளது! என்று சாடியுள்ளது. சாதாரண மக்கள் ஒரு சான்றிதழ் வாங்க மாதக்கணக்கில் அலைய வேண்டும். ஆனால், பா.ஜ.க.வுக்கு நெருக்கமான ஒருவருக்காக வெறும் 8 மணிநேரத்தில் த.வெ.க. அரசு யானை இடமாற்றத்திற்கு அனுமதி கொடுத்திருக்கிறது!

பாஜகவுக்குச் சேவை செய்யும் த.வெ.க. அரசைக் கேள்வி கேட்க வக்கில்லாமல், சந்தர்ப்பவாதக் கூட்டணிக் கட்சிகள் வாய்மூடிக் கிடக்கின்றன என்று விமர்சித்துள்ளது. "ஆர்.எஸ்.எஸ் பெற்றெடுத்த பிள்ளை விஜய்" என்று கூட்டணிக் கட்சித் தலைவர் சொன்னதை இப்போது நிரூபித்து விட்டது த.வெ.க. அரசு! பாஜகவின் ஒவ்வொரு செயலுக்கும் த.வெ.க. துணை போகிறது, அதை சந்தர்ப்பவாத கூட்டணிக் கட்சிகள் கை கட்டி வாய் பொத்தி வேடிக்கை பார்க்கின்றன! என்று தி.மு.க. ஐ.டி., விங் சாடியுள்ளது.

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம் - தோவாளை கிழக்கு ஒன்றியம்

ஆரல்வாய்மொழி பேரூர் தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் ஆலோசனைகள் வழங்கினார்!

கன்னியாகுமரி, நவ.-5-

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், தோவாளை கிழக்கு ஒன்றியம், ஆரல்வாய்மொழி பேரூர் தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டமானது (03.11.2026 - செவ்வாய்கிழமை) அன்று மாலை 6.00 மணியளவில் ஆரல்வாய்மொழி பேரூர் செயலாளர் கு.சுப்பிர மணியன் தலைமையில், தோவாளை கிழக்கு ஒன்றிய செயலாளர் த.செல்வன் முன்னிலையில் ஆரல்வாய்மொழி, பைபாஸ் சாலை, ராயல் உணவகம் அருகில் வைத்து நடைபெற்றது.

கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு கழக வளர்ச்சி பணிகள் தொடர்பான ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தின் இறுதியில் கழக நிர்வாகி தாமோதரன் ஏற்பாட்டில் ஆரல்வாய்மொழி பேரூர் கழக நிர்வாகிகளுக்கு மாவட்டச் செயலாளர் தீபாவளி பரிசுகளை வழங்கினார்.

ஆலோசனைக் கூட்டத்தில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட பொருளாளர் ஐ.கேட்சன், துணைச் செயலாளர் A.R. பூதலிங்கம், பொதுக்குழு உறுப்பினர் S.K.ரஹ்மான், பேரூர் அவைத் தலைவர் S.R.அகஸ்திலிங்கம், துணைச் செயலாளர் மகேஸ்வரி, முன்னாள் பேரூராட்சி துணைத் தலைவர் S.நாகராஜன், மாவட்ட பிரதிநிதிகள் P.சந்திரன், கெ.சேதுவேல், S.இம்மானு வேல், S.கல்யாணசுந்தரம், C.காந்தி, ஒன்றிய நிர்வாகிகள் S.சீனிவாசன், R.ராஜபாபு, C.ராஜாராமணன், தலைமைக் கழக பேச்சாளர் சி. செல்வகுமார், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள் C. சரவணன், K.S.பழனி, V.N.ராஜன், சொ.மகாராஜபிள்ளை, M.மகாலெட்சமி உட்பட ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், வட்ட, கிளை கழக செயலாளர்கள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், BLA2, BLC, BDA மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

வருகின்ற உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி பெறும் வகையில் அதற்கான களப் பணிகளை இன்றே தொடங்கி செயல்படுத்துவது என தீர்மானிக்கப் பட்டது.

கழக பணியினை தொய் வின்றி நடத்த கழக தலைவர் அன்பு கட்டளையை ஏற்று நடக்கவும், மாவட்ட கழகம் அறிவிக்கும் பணிகளை செவ் வனே நிறைவேற்றி கழகம் மீண்டும் ஆட்சி அமைக்க அயராது பாடுபட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

கடந்த தமிழ்நாடு சட்ட மன்றத் தேர்தலில் கழக வேட்பாளருக்காக உழைத்த கழக நிர்வாகிகளுக்கும், மதச் சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியினருக்கும் மற்றும் வாக்களித்த அனைத்து வாக்காள பெருமக்களுக்கும் மாவட்ட தி.மு.கழகம் மற்றும் ஆரல்வாய்மொழி பேரூர் தி.மு.க. சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.



சந்தி சிரிக்கும் சட்டம் – ஒழுங்கு!

செயலற்ற விஜய் ஆட்சியில் கொலை, கொள்ளைகள்!

(4.11.2026)

1. திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டை அருகே நண்பர்களுக்குள் ஏற்பட்ட தகராறில் பிரபல ரவுடி சரமாரியாக வெட்டிக் கொலை ....



2. ராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை அருகே மனநலம் பாதித்த வாலிபரை சரமாரியாக அடித்து கொலை செய்த ஐந்து பேர் சிக்கினர் ....

3. மதுரை மத்திய சிறையில் கைதியை கண்காணித்த போலீஸ்காரர் மீது சரமாரி தாக்குதல்....

4. திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை அருகே பதினாறு வயது சிறுமியிடம் ஆசை வார்த்தை கூறி பாலியல் சில்மிசத்தில் ஈடுபட்ட ஆட்டோ ஓட்டுனர் சிக்கினார் ...

5. சென்னை ஓட்டேரி அருகே பட்டாளம் பகுதியில் பானிப் பூரி கடை வியாபாரியை வழிமறித்து கத்தி முனையில் பணம் மற்றும் செல்போன் பறித்த இருவர் சிக்கினர் ....



6. சென்னை புளியந்தோப்பு அருகே வேலைக்குச் சென்று விட்டு திரும்பிய வட மாநில வாலிபரை வழிமறித்து கத்தி முனையில் வழிப்பறி செய்த இருவர் சிக்கினர்...

7. சென்னை ஆலந்தூர் அருகே மடுவங்கரை பகுதியில் உள்ள பெண்கள் தனியார் விடுதியில் 15 லட்ச ரூபாய் பணம் நூதன முறையில் மோசடி, பெண் சிக்கினார் ....

8. சென்னையை அடுத்த மாதவரம் ரவுண்டானா அருகே மீஞ்சூரில் இருந்து கோயம்பேடு வந்த மாநகரப் பேருந்து கண்ணாடியை உடைத்த ரவுடி. பயணிகள் அலறியடித்து ஓட்டம் ....



9.சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்திலிருந்து திருவனந்தபுரத்திற்கு செல்லும் எக்ஸ்பிரஸ் ரயில் மீது பெரம்பூர் அருகே சரமாரியாக கல்வீசிய மர்மநபர்கள், பயணிகள் பீதி ....

10. திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை அருகே இரவு நேரத்தில் ஓய்வு பெற்ற கிராம நிர்வாக அலுவலர் வீட்டின் மீது மர்ம நபர்கள் பெட்ரோல் குண்டு வீச்சு.

11. தமிழ்நாடு முழுவதும் கஞ்சா விற்பனை படுஜோர் , போலீசார் நடத்திய அதிரடி சோதனையில் 1760 கிலோ கஞ்சா சிக்கியது ....



12. சென்னை திருவொற்றியூர் அடுத்த எண்ணூர் கடற்கரை சாலையில் உள்ள டாஸ்மாக் கடையில் மதுபானம் வாங்க நின்றவர்கள் மீது சரமாரியாக காலி பாட்டில்கள் வீச்சு , மதுப் பிரியர்கள் அலறி அடித்து ஓட்டம்....

13. சென்னை விருகம்பாக்கம் காவல் நிலையத்தில் புகார்தாரர் மீது பொய் வழக்குப் பதிவு செய்த இரண்டு இன்ஸ்பெக்டர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்க சென்னை ஐகோர்ட் உத்தரவு ...

14. கிண்டி அரசு பல்நோக்கு மருத்துவமனையில் பணி புரியும் காவலாளி பட்டாகத்தியுடன் ரீல்ஸ் வெளியிட்டதால் பரபரப்பு ....